**ஜனவரி – 06**

# TNPSC துளிகள்

- 2019 ஆம் ஆண்டு நவம்பர் வரை, மகாராஷ்டிரா மாநிலத்தின் மராத்வாடா பகுதியில் விவசாயிகளின் தற்கொலைகளின் எண்ணிக்கையானது மிக அதிகமாக 835 ஆக பதிவாகியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## விவசாய மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA)

- மகாராஷ்டிரா, கேரளா, உத்தரப் பிரதேசம், நாகாலாந்து, அசாம், தமிழ்நாடு, பஞ்சாப் மற்றும் கர்நாடகா ஆகிய எட்டு மாநிலங்கள் விவசாய ஏற்றுமதியை உயர்த்துவதற்கான ஒரு செயல் திட்டத்தை முடிவு செய்துள்ளதாக விவசாய மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது (Agricultural and Processed Food Products Export Development Authority - APEDA) அறிவித்துள்ளது.
- இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தயாரிப்புத் தொகுதிகளாவன - ஜலந்தர் (உருளைக்கிழங்கு), சாங்லி (திராட்சை), சேலம் (கோழி), தேனி (வாழைப்பழம்), சித்தூர் (மாம்பழம்) ஆகியவையாகும்.
- வேளாண் ஏற்றுமதிக் கொள்கையானது 2018 ஆம் ஆண்டு டிசம்பரில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இந்தக் கொள்கையின் முக்கிய நோக்கமானது 2022 ஆம் ஆண்டில் விவசாய ஏற்றுமதியை 30 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 60 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இரட்டிப்பாக்குவது என்பதாகும்.
- 2016 ஆம் ஆண்டில், உலகளாவிய விவசாய ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு வெறும் 2.2% மட்டுமே இருந்தது.

## பெண்களுக்கான இணைய வழிப் பாதுகாப்பு முன்னெடுப்பு

- இந்திய சமூகச் சீர்திருத்தவாதியான சாவித்ரி பாய் பூலேவின் பிறந்த நாளான ஜனவரி 3 ஆம் தேதியில் மகாராஷ்டிரா மாநில அரசானது மாநிலம் முழுவதும் பெண்களுக்கான இணைய வழிப் பாதுகாப்பு குறித்த ஒரு முன்னெடுப்புப் பிரச்சாரத்தைத் தொடங்கி உள்ளது.
- இந்த முன்னெடுப்பானது சமூக விரோத சக்திகளால் இணையம் பல்வேறு வகையான குற்றங்களைச் செய்வதற்கு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பற்றி பெண்களுக்குக் கற்பிக்க உள்ளது.
- சாவித்ரி பாய் பூலே என்பவர் இந்தியாவின் முதல் பெண் ஆசிரியை ஆவார்.

## பிரதான் மந்திரி லகு வியாபரி மான்-தன் யோஜனா

- பிரதான் மந்திரி லகு வியாபாரி மான்-தன் யோஜனா என்று அழைக்கப்படுகின்ற வர்த்தகர்கள், கடைக்காரர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கான தேசிய ஓய்வூதியத் திட்டமானது 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது 3 கோடி சிறு வணிகர்கள் மற்றும் கடைக்காரர்களுக்குப் பயன்

அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அரசாங்கமானது 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் இறுதிக்குள் 50 லட்சம் சேர்க்கைக்கான இலக்குகளை நிர்ணயித்து இருந்தது.
- ஆனால் இது தற்போது 25000 பயனாளிகளை மட்டுமே அடைந்துள்ளது
- அனைத்து மாநிலங்களையும் ஒப்பிடும் பொழுது உத்தரப் பிரதேசத்திலிருந்து மட்டும் (6,765 நபர்களுடன்) அதிகமான பதிவு செய்யப் பட்டுள்ளது.
- மிசோரம் மற்றும் லட்சத் தீவு ஆகிய மாநிலங்களிலிருந்து இதுவரை யாரும் இந்தத் திட்டத்தில் பதிவு செய்யவில்லை.
- இத்திட்டத்தினை மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகமானது செயல்படுத்தி வருகின்றது.

# சர்வதேசச் செய்திகள்


## யுனெஸ்கோ அமைப்பின் படைப்பு நகரங்கள் வலையமைப்பு

- வியட்நாமிய தலைநகரமான ஹனோய் நகரமானது யுனெஸ்கோ அமைப்பின் படைப்பு நகர வலையமைப்பில் (UNESCO Creative Cities Network - UCCN) இணைகின்றது என்று முறையாக அறிவிக்கும் ஒரு விழாவை ஹனோய் அரசாங்கம் சமீபத்தில் நடத்தியது.
- UCCN ஆனது 2004 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இந்த வலையமைப்பானது ஏழு படைப்புத் துறைகளை உள்ளடக்கியுள்ளது. அவையாவன: கைவினை மற்றும் நாட்டுப்புறக் கலைகள், ஊடகக் கலைகள், திரைப்படம், வடிவமைப்பு, அறுசுவை உணவியல், இலக்கியம் மற்றும் இசை போன்றவை.
- UCCNல் ஐந்து இந்திய நகரங்கள் உள்ளன. அவை:
    - ஜெய்ப்பூர் - கைவினை மற்றும் நாட்டுப்புறக் கலைகள் (2015).
    - வாரணாசி - இசை (2015).
    - சென்னை - இசை (2017).
    - மும்பை - திரைப்படம் (2019).
    - ஹைதராபாத் – அறுசுவை உணவியல் (2019).

## அமெரிக்கா மற்றும் ஈரான்

- அமெரிக்க இராணுவமானது ஈரானின் இராணுவத் தளபதியான ஜெனரல் காசிம் சுலைமானியைப் படுகொலை செய்துள்ளது.
- ஈராக்கில் உள்ள பாக்தாத் விமான நிலையத்தில் அவர் கொல்லப்பட்டார்.
- அவர் குட்ஸ் படையின் தலைவராக இருந்தார்.
- குட்ஸ் என்பது ஜெருசலேம் என்ற சொல்லின் அரபு வார்த்தையாகும்.
- இது ஈரானியப் புரட்சிகரக் காவல்படையின் வெளிநாட்டு செயல்பாட்டுப் பிரிவு (Iranian Revolutionary Guards Corps - IRGC) மற்றும் அமெரிக்காவால் வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்பு என்று நிர்ணயிக்கப் பட்ட ஒரு படைப் பிரிவு ஆகும்.
- ஈரானியப் புரட்சி முடிவுக்கு வந்த பின்னர் அமைக்கப்பட்ட புதிய ஈரானிய அரசாங்கத்தின் இஸ்லாமிய ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக 1979 ஆம் ஆண்டில்

அயதுல்லா ருஹொல்லா கோமெய்னி என்பவர் IRGC அமைப்பை உருவாக்கினார்.




# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு

- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் தேதியுடன் முடிவடைந்த 2019 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பானது 457.468 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளது.
- இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்புகளானவை பெருவாரியாக அமெரிக்க அரசாங்கப் பத்திரங்கள் மற்றும் நிறுவனப் பத்திரங்களின் வடிவங்களிலும் கிட்டத்தட்ட 6% அந்நியச் செலாவணி இருப்புகள் தங்கத்திலும் உள்ளன.
- வெளிநாட்டு நாணயக் கையிருப்புகளில் அமெரிக்கக் கருவூலப் பத்திரங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிற அரசாங்கங்களின் பத்திரங்கள் மற்றும் வெளிநாட்டு மத்திய & வணிக வங்கிகளில் உள்ள வைப்புகள் ஆகியவையும் அடங்கும்.
- சீனக் குடியரசிற்கு (தைவான்) சற்று குறைவாக, அந்நிய செலாவணி இருப்புக்களின் நாடுகளின் பட்டியலில் இந்தியா 7வது இடத்தில் (2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலைமையின் படி) உள்ளது.

***கையிருப்பு நிலை***

- வெளிநாட்டு நாணயக் கையிருப்புகள் - 424.936 பில்லியன் அமெரிக்க டாலர்.
- தங்கக் கையிருப்பு நிலை - 27.392 பில்லியன் அமெரிக்க டாலர்.
- சர்வதேச நாணய நிதியத்தின் சிறப்பு எடுப்பு உரிமைகள் - 1.441 பில்லியன் அமெரிக்க டாலர்.
- சர்வதேச நாணய நிதியத்தில் இந்தியாவின் கையிருப்பு நிலை - 3.7 பில்லியன்

அமெரிக்க டாலர்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## AK - 203 தாக்குதல் துப்பாக்கிகள்

- இந்திய ராணுவமானது ரஷ்யாவுடன் AK - 203 வகை தாக்குதல் துப்பாக்கிகளை வாங்குவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளது.
- இந்திய ராணுவமானது AK - 203 துப்பாக்கிகள் தவிர, சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து SIG - 716 வகை தாக்குதல் துப்பாக்கிகளின் முதல் தொகுப்பை 10,000 என்ற எண்ணிக்கையில் பெற்றுள்ளது.
- தற்போது இந்திய ராணுவமானது உள்நாட்டு INSAS (Indian National Small Arms System - இந்திய தேசிய சிறிய ஆயுத அமைப்பு) ரக துப்பாக்கிகளைப் பயன்படுத்துகின்றது.
- INSAS என்பது ஒரு இலகு ரக இயந்திரத் துப்பாக்கியாகும். இது தற்போது பீரங்கி தொழிற்சாலை - திருச்சி, இஷாபூர் படைக்கலச் சாலை மற்றும் கான்பூர் ஆகிய இடங்களில் தயாரிக்கப் படுகின்றது.




## நேத்ரா திட்டம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு நேத்ரா திட்டத்தின் கீழ் ஒரு ஒளியியல் தொலைநோக்கியை நிறுவுவதற்காக இந்திய வானியற்பியல் நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- நேத்ரா திட்டமானது 2019 ஆம் ஆண்டு செப்டம்பரில் இஸ்ரோவால் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், இஸ்ரோ அமைப்பானது கண்காணிப்பு வசதிகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. அவை செயற்கைக் கோள்களுக்கு அவற்றின் சுற்றுப்பாதையில் உள்ள மாசுக்கள் மற்றும் அவற்றினால் ஏற்படும் அபாயங்கள் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை செய்ய உதவும்.
- இந்தத் திட்டமானது இந்திய செயற்கைக் கோள்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைக் கண்டறிய உதவுகின்றது.
- தற்போது, இந்தியா 15 தகவல் தொடர்பு செயற்கைக் கோள்கள், 13 தொலையுணர்வு திறன் கொண்ட செயற்கைக் கோள்கள் மற்றும் 8 வழிகாட்டும் செயற்கைக் கோள்களை இயக்குகின்றது.

- இஸ்ரோவைத் தவிர, பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பும் (Defence Research Development Organisation – DRDO) நேத்ரா திட்டத்தினை (போக்குவரத்துப் பகுப்பாய்வு வலையமைப்பு) இயக்குகின்றது.
- இது இணையப் போக்குவரத்தைப் பகுப்பாய்வு செய்யப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு மென்பொருள் வலையமைப்பு ஆகும்.
- இந்தத் திட்டத்தினை ஆராய்ச்சி மற்றும் ஆய்வுப் பிரிவு, நுண்ணறிவுப் பிரிவு மற்றும் இந்திய அரசின் பிற நுண்ணறிவு அமைப்புகள் பயன்படுத்துகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சிவப்பு நிற நொறுங்கு விண்மீன்

- நட்சத்திர மீன்களின் வகையைச் சேர்ந்த சிவப்பு நிறம் கொண்ட நொறுங்கு விண்மீன்களானவை கண்கள் இல்லாவிட்டாலும் பார்க்கும் திறன் கொண்டவை என்று ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர்.
- இவை கரீபியன் கடல் பகுதியில் உள்ள பவளப்பாறைகளில் வாழ்கின்றன.
- கடல் அர்ச்சின் (கடல் முள்ளெலி என்னும் கடல்வாழ் விலங்கு) இனத்திற்குப் பிறகு, இந்தத் திறனைக் கொண்டிருக்கும் இரண்டாவது உயிரினமாக இது கண்டறியப் பட்டுள்ளது.
- கண்கள் இல்லாமல் பார்க்கும் திறனானது "வெளிப்புறப் பார்வை" என்று அழைக்கப் படுகின்றது.
- வெளிப்புறப் பார்வையானது அவற்றின் உடலில் காணப்படும் ஒளி ஏற்பி செல்கள் மூலம் எளிதாக்கப் படுகின்றன.



# மாநிலச் செய்திகள்

## பித்தர்கனிகா தேசியப் பூங்கா

- பித்தர்கனிகா தேசியப் பூங்காவில் சமீபத்தில் நடத்தப்பட்ட உப்பு நீர் முதலைகளின் கணக்கெடுப்பின்படி, 2018 ஆம் ஆண்டில் 1,742 ஆக இருந்ததை விட அவற்றின் எண்ணிக்கையானது தற்போது 1,757 ஆக உயர்ந்துள்ளது.
- இவை பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் வெளியிட்டுள்ள சிவப்புப் பட்டியலில் குறைந்த அபாயம் கொண்ட உயிரினங்களாகப் பட்டியலிடப் பட்டுள்ளன.
- இந்தப் பூங்காவானது 2002 ஆம் ஆண்டில் ராம்சார் ஒப்பந்தத்தில் இடம்பெறும் நிலையைப் பெற்றது.

- சிலிக்கா ஏரிக்கு அடுத்ததாக இந்த நிலையை அடைந்த இரண்டாவது இந்தியப் பகுதியாக இந்தப் பூங்கா கருதப்படுகின்றது.
- இந்தப் பூங்காவானது இந்தியாவின் இரண்டாவது பெரிய சதுப்பு நில சுற்றுச்சூழல் அமைப்பாகும்.

### விவசாயக் கடன் தள்ளுபடி

- மகாராஷ்டிரா மாநிலத்தில் புதியதாக அமைக்கப்பட்ட அரசாங்கமானது 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் 2019 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை நிலுவையில் உள்ள ரூ.2 லட்சம் வரையிலான மதிப்பு கொண்ட விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வதாக அறிவித்துள்ளது.
- இதனால் மகாராஷ்டிரா மாநிலமானது கடந்த இரண்டரை ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரண்டு முறை விவசாயக் கடன் தள்ளுபடியை வழங்கியுள்ள ஒரே மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- 2008-09 ஆம் ஆண்டில், மத்தியில் ஆட்சி செய்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கமானது நாடு முழுவதற்கும் கடன் தள்ளுபடித் திட்டத்தை அறிவித்திருந்தது.
- மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் இது போன்ற பிற மாநிலங்கள் சமீப காலங்களில் இதே போன்ற திட்டங்களை அறிவித்துள்ளன.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### கடல் சூழ்நிலை மண்டலம் - சவால்கள் மற்றும் வாய்ப்புகள் (MECOS)

- கடல் சூழ்நிலை மண்டலம் - சவால்கள் மற்றும் வாய்ப்புகள் (Marine Ecosystems-Challenges and Opportunities - MECOS) அமைப்பின் மூன்றாவது சர்வதேச கருத்தரங்கமானது கொச்சியில் நடைபெற உள்ளது.
- இந்தக் கருத்தரங்கத்தை இந்தியக் கடல் உயிரியல் சங்கம் நடத்துகின்றது.
- இந்தக் கருத்தரங்கமானது ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் (Sustainable Development Goal - SDG) ஒன்றான SDG -14 மீது கவனம் செலுத்த உள்ளது.
- "பெருங்கடல்களையும் அதன் வளங்களையும் நீடித்த வளர்ச்சிக்காகப் பாதுகாத்துப் பயன்படுத்துவதனை" SDG -14 வலியுறுத்துகின்றது.

### அந்தராஷ்டிரிய யோகா திவாஸ் மீடியா சம்மன் விருது

- மத்தியத் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகமானது 30 ஊடக நிறுவனங்களுக்கு "அந்தராஷ்டிரிய யோகா திவாஸ் மீடியா சம்மன்" என்ற விருதை வழங்க உள்ளது.
- இந்த விருதானது முதல் முறையாக வழங்கப்பட உள்ளது.
- இந்த விருதானது யோகாவினைப் பரப்புவதில் ஊடகங்களின் நேர்மறையானப் பங்கை ஆதரிப்பதற்காகவே வழங்கப் படுகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★